# யார்மீதும் சீனவுக்கு ஆக்ரமிப்பு எண்ணமில்லை

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (24—5—50) ❖ வெளியீடு (25—5—50) [ இதழ் 260

## இந்தியா மீது ஒரு துளிக்கூட கிடையாது

## உலக அமைதியை உருவாக்க இரு நாடுகளின் ஒத்துழைப்பு தேவை

## மேல்நாடுகள் பொய் பிரசாரத்துக்கு மா-ஸே-துங் 'ஆப்பு'

"எந்த நாட்டின் மீதும் முக்கியமாக இந்தியாவின் மீது எங்களுக்கு ஆக்ரமிப்பு எண்ணமென்பது ஒரு சிறிதும் கிடையாது" என்று சீனக் குடியரசின் தலைவர் தோழர் மா-ஸே-துங் பீகிங்கில் கூறினார். இந்தியாவின் பிரதிநிதியாக சீனா சென்றுள்ள தோழர் சர்தார் பணிக்கர் மே மாதம் 20ந்தேதி தம்முடைய நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பித்துப் பதவி ஏற்கையில் இவ்வாறு கூறினார்.

தோழர். மா-ஸே-துங் மேலும் கூறியதாவது:—இந்திய குடியரசுத் தலைவர் தங்கள் மூலம் அனுப்பியவாழ்த்துகளைப்பெற்று மகிழ்ச்சியடைகிறேன்.

"ஒரே எல்லையைக் கொண்டிருப்பதாலும் பல ஆயிரமாண்டுகளாகக் கலாசாரத் தொடர்பு பெற்றுள்ள காரணத்தாலும் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே நல்லுறவு நீடித்துவந்திருக்கிறது. இதை வரலாறும் பண்பாடும் எடுத்துக் கூறுகின்றன. ஆக்ரமிப்பாளர் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள நமயிரு நாட்டு மக்களும் சென்ற சில நூற்றாண்டுகளாக விடாது போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் இருநாட்டு மக்களிடையே ஒரு நல்லெண்ணம் நிலவுகிறது இந்த அரசியல் உறவின் காரணமாக ஏற்கெனவே மக்களிடையே ஏற்பட்டுள்ள நல்லுறவு வளருவதுடன் இரு நாடுகளின் ஒத்துழைப்பால் ஆசியாவின் அமைதிக்கும் உலக அமைதிக்கும், முக்கிய வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் இந்தியக் குடியரசின் பிரதிநிதியாகக் குடியரசு சீனாவில் தங்குவதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். நம்மிரு நாடுகளின் ஒத்துழைப்புக்கான ஆக்கவேலைகளை தாங்கள் செய்வதில் என் மனப்பூர்வமான உதவியைத் தரத் தயாராக இருக்கிறேன். "இந்திய மக்கள் பலம் பெற்று வாழவேண்டுமென்று நான் விழைகிறேன்."

நற்சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பித்து சர்தார் கெ. எம். பணிக்கர் சமர்ப்பிக்க வந்தபோது செஞ்சீனாவின் பிரதம மந்திரி தோழர் சே. என். லே அவரை முன்னின்று வரவேற்றார். குடியரசு இந்தியாவின் பிரதிநிதியாகச்சீனா வந்திருப்பதாக நற்சாட்சிப் பத்திரங்களைச் சீனக்குடியரசின் தலைவர் தோழர் மா.சே-துங்கிடம் சமர்ப்பித்து சர்தார்பணிக்கர் கூறியதாவது "மக்கள் குடியரசு சீனாவில் இந்தியாவின் பிரதிநிதியாக இருக்க அனுப்பப்பட்டது [illegible] களிக்கப்பட்ட கௌரவம் என்று நான் கருதுகிறேன்.

இந்தியா சீரும் சிறப்பும் பெற்று சீரோடு வாழவேண்டுமென்று இந்திய மக்களின் வாழ்த்துச் செய்திகளை கொண்டுவந்திருக்கிறேன்.

"நம்மிருநாடுகளுக்கிடையே என்றும் நல்லுறவு நிலவிவந்தது. இருநாட்டு மக்களின் குறிக்கோள் அமைதி நிலைநாட்டுவதாக இருந்ததுடன் அதற்காக ஓயாமல் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். நம்மிருநாடுகளும் நாகரீகத்தையும், கலாச்சாரத்தையும் பரப்புவதில் முன்பு ஒத்துழைத்துவந்த

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## கருங்காலித்தனம்செய்தால் காதறுக்கப்படுமாம்!

## நைரோபி தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

## தொழிற்சங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதன் விளைவு

நைரோபி, மே 23—

நைரோபியில் சில தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஆரம்பமான ஸ்டிரைக், ஆரம்பித்து இரண்டாவது வாரம் பிறந்தும் இன்னும் தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கிறது.

யாராவது வேலைக்கு திரும்பினால் ரேஸர் பிளேடினால் அவர்கள் காதுகள் அறுக்கப்பட்டுவிடும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் பயமுறுத்திவருகின்றனர்.

போலீசார் விமான மூலம் துண்டு பிரசுரங்களை வீசி வருகின்றனர். அதில் தொழிற்சங்க தலைவர்களை எக்காரணத்தைக்கொண்டும் விடுதலை செய்யமுடியாது என்றும் ஸ்டிரைக் செய்துள்ளவர்கள் உடனே வேலைக்கு திரும்பவேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறதாம்.

## மராமத்திலாக்காவில் பதவிகள்

—(o)—

## பாதிக்குமேல் பார்ப்பனர்களால் வகுக்கப்படுகிறது

—(o)—

## அப்படியிருந்தும் "தென்னேட்டியார்" அட்டகாசமா?

மராமத்துஇலாக்காவுக்காக விளம்பரப்படுத்தப்பட்ட 500 சூப்ரவைசர்வேலைகளுக்கு ஒரு பார்ப்பனரைக்கூட எடுக்கவில்லையென்று கண்டித்துக் தோழர் தென்னேட்டி விஸ்வநாதம், "ஹிந்து" "இண்டியன் ரிபப்ளிக்" ஆகிய தினத்தாள்களில் எழுதிய கடிதங்களுக்குச் சென்னை சர்க்கார் பதில் தந்து இருக்கிறது.

சர்க்கார் இதுபற்றிய தகவல்களை நன்கு ஆராய்ந்து நீதிக்கு விரோதமாக ஒன்றும் நடவு செய்யவில்லையென்று அறிவித்துள்ளது.

"1927 லிருந்து வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் அமுலில் இருந்துவருகிறது. இதன்படி ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இடங்கள் ஒவ்வொரு வகுப்பாருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வகுப்புகளில் பார்ப்பனரும் ஒருவகுதியினர். குறிப்பிட்ட வகுப்புகளிலிருந்து ஆட்கள் கிடைக்காவிட்டால் அடுத்தபடியுள்ள வகுப்புகளிலிருந்து இதுவரை ஆட்கள் திரட்டப்பட்டுவந்தது. ஒரு தடவை இதுபோன்று தனக்கு ஒதுக்கப்படும் இடங்களை இழக்கும் வகுப்புக்கு அதைத் தொடர்ந்து ஆள் திரட்டும்போது முன்பிழந்த இடங்களைச் சரிக்கட்டி இடங்கள் தரப்பட்டுவந்தன

1947-ல் தேவைப்பட்ட சூப்ரவைசர்கள் 300 பேர். அவர்களில் ஒரு இடம்கூட விதிமுறைப்படி பார்ப்பனசமூகத்தினருக்குக்கொடுத்திருக்கக் கூடாது. ஆனால் உண்மையில் எடுக்கப்பட்ட 271 பேரில் 134 பேர் பார்ப்பனர்கள்.

1949-வது ஆண்டு ஆள் எடுப்புத் திட்டத்தில் 300 பேரில 43 இடங்கள் பார்ப்பனருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் உண்மை வேலைக்கு சேர்த்தப்பட்ட 217 பேரில் 85 பேர் பார்ப்பனர்.

இதுபோன்று அளவுக்கு மீறி மூன் வருடங்களில் பார்ப்பனர்களுக்கு ஏராளமாக உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டிருப்பதால், மற்ற வகுப்பார்கள் இழந்த ஸ்தானங்களைச் சரிக்கட்டவேண்டியிருக்கிறது. அதனால்தான் இவ்வாண்டு விளம்பரப்படுத்தப்பட்ட 500 சூப்ரவைசர்கள் வேலைக்கு பார்ப்பன சமூகத்திலிருந்து ஒருவரைக்கூட எடுப்பதாகப் படவில்லை ஆனால் தகுந்த ஆட்கள் கிடைக்காவிட்டால் தேர்ச்செய்துகொண்ட பார்ப்பனருக்குக் கொடுப்பது பற்றி ஆலோசிக்கப்படலாம்.

"பொதுமக்கள் தெரிந்துகொள்ளக்கூடிய மற்றொரு உண்மையென்னவென்றால் மராமத்து இலாக்காவில் வேலை செய்யும் 1036 சூப்ரவைசர்களில் 555 பேர் பார்ப்பனர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின்படி அவர்கள் 148 பதவிகள்தான் பெற்றிருக்கவேண்டும்"

## ஜப்பானில் வேலை இல்லாத் திண்டாட்டம்

### 30 லட்சம் பேர் தவிப்பு

லண்டன், மே 23—

ஜப்பானில் 30 லட்சம் பேர் வேலையின்றி இருப்பதாக டோக்கியோ செய்தி ஒன்று கூறுகிறது.

இதை ஆக்ரமிப்பு அதிகாரிகள் மறுத்தாலும் ஜப்பானில் மந்தநிலைமை ஏற்பட்டிருப்பதாக ஐப்பானியர் கூறுகின்றனர்.

## தென்னுப்பிரிக்க ரயில் வண்டிகளில் நிறத்திமிர்

—(o)—

## மலான் சர்க்காரின் மமதைக்கு ஆப்பு!

## நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு

கேப்டவுன், மே. 23—

ரயில் பிரயாணத்திலும் நிறத்திமிர் கொள்கையை ஏற்படுத்திய மலான் சர்க்கார் முகத்தில் டவுன்போண்டின் அப்பீல்கோர்ட் சரியை பூசி திரப்பளித்திருக்கிறது.

ஐரோப்பியர்கள் எந்த வண்டியில் வேண்டுமானாலும் ஏறலாம் ஆனால் கருப்பு நிறமுள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் ஏறவேண்டும் என்று ஏற்படுத்தியிருப்பது பட்சபாதம் காட்டுவதாக இருக்கிறது என்று கோர்ட்டார் அபிப்பிராயம் தெரிவித்து மலான் சர்க்காரின் இந்த உத்தரவுகள் செல்லாதென தீர்ப்புக் கூறினர்.

அப்துல்லா அப்துல் ரஹிமான் என்பவர் வெள்ளையருக்கு மாத்திரம் உரிய வண்டிகளில் ஏறும்படி தாண்டியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு. அவருக்கு 5 டவுன்கள் அபராதம் விதிக்கப்பட்டது இதை எதிர்த்து அவர் அப்பீல் செய்துகொண்டார்.

மலான் சர்க்காரில் போக்குவரத்து மந்திரியான [illegible] ஸ்வர் கோர்ட் தீர்ப்பு எப்படியிருந்தபோதிலும் ரயில்வண்டிகளில் அந்தக்கொள்கை தொடர்ந்தே அனுசரிக்கப்படும் என்றும், இந்த வழக்கு பழைய ரெகுலேஷன் பற்றியவை என்றும் இப்பொழுது அவை திருத்தப்பட்டு விட்டனவென்றும் கூறுகிறார்.

இத்தீர்ப்புமூலம் எல்லா நிறத்திமிர் கொள்கை நடவடிக்கைகளுமே பாதிக்கப்படும் என்று சட்டநிபுணர்கள் கருதுகிறார்கள்.

# மாலை மணி

சென்னை 24—5—50 புதன்கிழமை


# புரியவில்லையா? :: பிடிக்கவில்லையா?

"இந்து என்று சொல்லிக் கொள்வதிலே நான் வெட்கப்படவில்லை" என்று அன்றொரு நாள் கூறிப் பூரிப்படைந்த அன்பர் ஆர். கே. சண்முகனார், இப்பொழுது "திராவிடர் என்ற வார்த்தையே எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொல்லிச் சோகிக்கிறார்!

இந்த நிலை கண்டு ஆச்சரியப்படுவதற்குமில்லை— அருவருப்புக்கொள்வதற்குமில்லை— பரிதாபப்படத்தான் வேண்டியிருக்கிறது!

இந்த நாட்டிலே நாடாண்ட கோமான்களும், செல்வச் சீமான்களும் "ஆரிய சாஸ்திரங்களுக்குப்" பலியாகி, அடிமைப்பட்டு, அடிபணிந்து வாழ்ந்து வந்த நாட்களில், கோவைக்கோமானும், செல்வச் சீமானும், பொருளாதார அறிஞனுமான தோழர் ஆர். கே. சண்முகம், திராவிடப் பெருங்குடி மக்களிடத்து இனவுணர்ச்சி காட்டி, பகுத்தறிவுக்கொள்கை பரப்பி செந்தமிழ் நாட்டுப்பற்றுக் கொண்டு, பொதுநலப்பணி ஆற்றி வந்ததை நாடு கண்டது! அதே ஆர். கே. சண்முகனார் ஆரியத்திடம் ஆசைகொண்டும் இந்து என்று சொல்லிக்கொள்வதிலே பெருமைப்பட்டும், பழமைப் புராணங்களைக் காப்பதிலே பற்றுளங்கொண்டும், சமஸ்கிருத ஞானத்தோடு சரசமாட விரும்பியும் முனைந்துள்ள நிலையை நாடு நன்கு இன்று காண்கின்றது!

இரண்டு நிலைக்கும் பெரித்த வேறுபாடு—இரண்டும் வேறுபட்டன என்பதுமட்டுமல்ல, இரண்டும் முரண்பாடு கொண்டவை! வேறுபாடு ஏற்பட்டிருப்பது முன்னேக்கி அல்ல, பின்னேக்கி, மேல் நோக்கி அல்ல, கீழ் நோக்கி! பரிதாபத்திற்குரிய நிலை! அந்த அளவுக்கு ஆரியம் ஆட்கொண்டுவிட்டது; அவரும் அடிமை போகிவிட்டார்!

அரியம், 'அக்னியாஸ்திரம்' முதற்கொண்டு "மோகினி யாஸ்திரம்" வரையிலே உள்ள பல்வேறு அஸ்திரங்களை விட்டுத்தான் பகைவர்களை மிரட்டி மடக்குவது வழக்கம். எந்த 'அஸ்திரம்" அன்பர் ஆர் கே. சண்முகனாரை ஆட்கொண்டதோ, தெரியவில்லை! ஆரியத்திடம் அபாரமோகம் ஏற்பட்டுள்ளது அவருக்கு! சண்முகம் "செட்டியார்' சண்முக "சாஸ்திரியாராக" மாறி வருகிறார்!

'திராவிடம்" என்ற சொல் அவருக்குப்பிடிக்கவில்லையாம். கோவைத் தமிழ்த்திருவிழா கூட்டத்தில் அக்கருத்தைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்!

"திராவிடம்" பிடிக்கவில்லையாம்; "ஆரியம்" அவ்வளவு அதிகமாகப் பிடிக்கிறது போலும்!

தோழர் ஆர். கே. சண்முகனார் அவர்களுக்குத் திராவிடம் பிடிக்கவில்லையா? புரியவில்லையா? என்பது தெரியவில்லை! திராவிடம் என்பது புரியாத காரணத்தாலே பிடிக்கவில்லையா? ஆரிய மோகத்தின் காரணமாகப் பிடிக்காததால் புரிந்துகொள்ள மறுக்கிறாரா? தெரியவில்லை!

"திராவிடம்" என்ற சொல் வேதங்கள் ஸ்மிருதிகள், உபநிஷத்துகள் இவைகளில் இல்லையாம்; தமிழர்கள் உண்டாக்கவில்லையாம்; இது கிரேக்கர்களால் அழைக்கப்பட்டு திரிபடைந்த சொல்லாம்! இத்தகைய ஆராய்ச்சிக் கருத்துக்களை(?) வெளியிட்டுள்ளார் விளக்கம் தரும் எண்ணத்தில் போலும்! 'திராவிடம்" என்பது தமிழ்ச் சொல்லேயாகும் என்றும், தமிழகத்தை வடமொழியாளர்கள் வழங்கிய விதம் அவ்வாறு என்றும், திரைப்பிள்ளைகள் என்ற சொற்றொடரிலிருந்து பிறந்தது என்றும், இன்னும் பற்பல காரணங்களைக் கூறுவர் ஆராய்ச்சி வல்லுனர்கள். இப்பொழுது தோழர் சண்முகம் புதிய ஆராய்ச்சிக் கருத்தை வெளியிடுகிறார்! எது எப்படியாயினும் "திராவிடம்" என்ற சொல்லுக்கு அடிப்படையாக விளங்குவது தூய தமிழ்ச் சொல்தான் என்பதும், தூய தமிழ்ச் சொல் திரிந்துதான் 'திராவிடம்" என்ற சொல் வந்திருக்கிறது என்பதும் பெறப்படும் போது "திராவிடம்" என்பதைத் தமிழ்ச் சொல் என்று கூறுவதால் எப்படித் தவறு செய்வதாகக் கருத முடியும்.

தமிழ்ச் சொல் ஒன்று திரிந்து, வேறோர் சொல்லாக வந்து, அதே பொருளை உணர்த்தும்போது அந்தச் சொல் தனக்குப்பிடிக்கவில்லை என்ற காரணத்தால் "திராவிடம்." என்ற சொல்லை அவர் வெறுக்கிறாரென்றால், "இந்தியா" என்று கிரேக்கர்களால் வழங்கப்பட்ட சொல்லை எப்படி ஏற்றுக்கொள்ளத் துணிகிறார்? அதுமட்டும் எப்படிப்பிடிக்கிறது! தமிழிலே வந்து சேர்ந்திருக்கும் பிறமொழிச் சொற்களெல்லாம் எப்படி பிடிக்கின்றன அவருக்கு? "திராவிடம்" பிடிக்கவில்லையாம்; "சண்முகம்" என்றவடமொழிப்பெயர் அவர் சொந்தத்திற்குப் பிடிக்கிறது போலும்!

திரு — இடம் = அழகிய இடம் என்ற பொருள்தரும் 'திராவிடம்" ஏனோதானோ, அன்பர் சண்முகனாருக்குப் பிடிக்கவில்லை! ஆரியத்திடமும் ஆரிய அன்பர்களிடமும், ஆரிய கலாசாரத்திடமும், ஆரிய மொழியிடத்தும், அவருக்கு அத்தனை அளவு அதிகப்படியாக மோகம் பிறந்திருக்கிறது.

தமிழர் பண்பாடு அதாவது திராவிடர் பண்பாடு ஆரியர் பண்பாட்டினின்றும் எவ்வளவோ வேறுபட்டது என்றும், திராவிடர் பண்பாடு ஆரியர் பண்பாட்டைவிட எவ்வளவோ உயர்ந்தது என்றும் திராவிடர் பண்பாடு ஆரியர் பண்பாட்டினின்றும் விலகி தனித்து நின்று சிறந்தோங்கி விளங்கும் ஆற்றல் படைத்தது என்றும், ஆரிய பண்பாட்டின் சேர்க்கையாலும் ஆதிக்கத்தாலுமேதான் திராவிடர் பண்பாடு சீர்குலைக்கப்பட்டுச் சிதறடிக்கப்பட்டது. என்றும் அரியபெரிய வரலாற்றாசிரியர்களும், மொழிநூல் அறிஞர்களும் வலியுறுத்தி நிலைநாட்டி வந்திருக்கின்றனர். உண்மை இவ்வாறு இருக்க, புதிய "வீபீஷண" கோலம் பூண்டிருக்கும் ஆர். கே. சண்முகனார், "சமஸ்கிருத ஞானமில்லாவிட்டால், தமிழ் கலாசாரமும், பண்பாடும் பரிபூரணத் தன்மைப் பெருமல் அரைகுறையாக இருக்குமென்று நான் கருதுகிறேன்' என்று கோவைக் கூட்டத்தில் கூறியுள்ளார், தனித்து முழுமைப் பெற்று, வளஞ்செறிந்து, செழுமையுடைய தமிழின் உண்மை ஆற்றலை அறிந்து கொள்ள முடியாத அறிவிலியாய் அல்லது அறிந்தும் உண்மையை மாற்றிக் கூறும் அயோக்கியனாய் ஒருவன் இருந்தது, தாய்மொழியாம் தமிழழைக் காட்டிக்கொடுக்கும் இழிதகைப் பண்பு இதைவிட வேறென்றிருக்க முடியாது!

அன்பர் ஆர். கே சண்முகம் பொருளாதாரத்திலே நிபுணர், அதை யாரும் மறுக்க மாட்டார்கள். அத்துறையில் அவர் வழங்கும் கருத்துக்கள் போற்றிக்கொள்ளத்தக்கனவாகவும் இருக்கக்கூடும், ஆனால் மொழி, இலக்கியம், கலாசாரம் பண்பாடுபோன்ற பிரச்சினைகளில் அவர் தலையிட வேண்டிய அவசியமில்லை; தலையிட்டுப் புரிந்துகொள்ளவில்லை என்பதுமட்டுமல்ல, யாரையோ திருப்திப்படுத்துவதற்காக ஏதேதோ உளறியும் கொட்டிவிடுகிறார் என்பது தமிழ்விழாக் கூட்டப் பேச்சே போதிய சான்றாகும்!

புரியாத பிரச்சினையில் தலையிடாமலிருப்பது நல்லது; சரிவரப்புரிந்து கொண்டு உண்மை அறியாத நிலையில், ஒன்றின் மீது தீர்ப்பு வழங்குதல் அறியாமையின் விளைவாகும்! திராவிடம் பற்றியும் திராவிடக் கலசாரம் பற்றியும் திராவிடப்பண்பாடு பற்றியும் நன்கு புரிந்துகொள்ள அன்பர் சண்முகம் முயலுவது நல்லது!

தோழர் ஆர். கே. சண்முகம் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியிருக்கிறார்(?) என்பதிலே நாட்டவர்க்கு எவ்வளவு சந்தேகம் ஏற்படுகிறதோ அவ்வளவு சந்தேகம் அவருடைய தமிழ்ப்பற்றைப் பற்றியும் கொள்ளவேண்டிய நிலையை அவருடைய பேச்சு ஏற்படுத்திவிட்டது!

'திராவிடத்தின்' உண்மைப் பொருள் புரியவில்லையா? அல்லது ஆரியமோகத்தின் காரணமாகச்சொல்லே பிடிக்கவில்லையா? என்றே அன்பர் ஆர். கே, சண்முகனார் அவர்களைக் கேட்கத்தோன்றுகிறது!

# விஷங்களுக்கெல்லாம் மாற்று மருந்து

## புஸ்தகம் வெளியிட சர்க்கார் ஏற்பாடு

சென்னை, மே 23—

சகலவிதமான விஷங்களுக்கும் மாற்று தெரிவிக்கும் ஒரு அருமையான நூலை பிரசுரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்துவருகின்றனர். சுவடி ரூபமாக உள்ள இந்த வரிய நூலின் பெயர் 'தந்திர சாரசங்கிரகம்' அல்லது 'விஷநாராயணிகா' என்று பெயராம்.

15-வது நூற்றாண்டில் மலையாளத்தில் வசித்த தோழர் நாராயணு என்பவர் இதை வடமொழியில் இயற்றியிருக்கிறார் சில கடினமான பதங்களுக்கு தமிழிலும், மலையாளத்திலும் அர்த்தம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அருமையான நூல் இன்னும் ஒரு வாரத்தில் பிரசுரிக்கப்படும் என்று ஓரியண்டல் மானுஸ்கிரிட் லைப்ரரி க்யூரேட்டர் தோழர் டி. சந்திரசேகரன் கூறினர்.

இது மிகவும் பயன்படக்கூடிய நூல் என்றும், இதை எல்லா நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப் படவேண்டியது அவசியம் என்றும் கிராம மக்களுக்கு இது மிகவும் பயன்படக்கூடும் என்றும் அவர் கூறினர்.

இந்த நூலில் பாம்பு போன்ற ஊர்வன ஜந்துக்களின் விஷம், நாய் கழுதை, தேள், எட்டுக்கால் பூச்சி இவைகளின் 'கடிவிஷம்' இவைகளுக்கு மாற்று மருந்துகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

எலிகளில் மட்டும் 16 ரகங்கள் இருப்பதாக இந்நூலில் காணப்படுகிறது. எந்தெந்த விதமான எலிகள் கடித்தால் என்னென்ன விதமான கெடுதல்கள் ஏற்படும் என்பது விவரமாக கூறப்பட்டிருக்கிறது. சில எலிகள் கடித்தால் உடம்பு வீங்குமாம். சில எலிகள் கடித்தால் நாக்கு வரண்டுபோகுமாம்.

## பிரிட்டிஷ் பொதுத்தேர்தல் பற்றி ஆலோசனை

லண்டன், மே 23—

தொழிற்கட்சித் தலைவர்கள் கூடிப்பேசிய ரகசிய மகாநாட்டில் பொதுத்தேர்தல் தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்குமா என்பது பற்றி எதிர்கட்சி வட்டாரத்தில் ஹேஷ்யங்கள் கிளப்பப்படுகின்றன.

இம்மாநாட்டில் மந்திரிகள் தொழிற்கட்சி நிர்வாகக் கமிட்டியினர், தொழில் சங்க காங்கிரஸ் தலைவர்கள் கலந்துகொண்டனர். இவ்வாண்டே தேர்தல் நடத்துவதா அல்லது அடுத்த பிப்ரவரி வரை இதே மாதிரி குறுகிய மெஜாரிட்டியுடன் காலத்தை தள்ளுவதா என்பது குறித்து மந்திரிகளிடையே அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது என்று கூறப்படுகிறது. —ஜுளோப்

## பாலஸ்தீன பிரச்னை

### ஐ. நா. சமரச கமிஷன் முடிவு

டமாஸ்கஸ், மே 23—

பாலஸ்தீனப் பிரச்சினையைக் குறித்து விவாதிக்க அரபு-யூதக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்துவதென்று ஐ. நா. சமரச கமிஷன் முடிவு செய்திருக்கிறது இத் தீர்மானத்தைக் கமிஷன் ஸிரியா, எகிப்து லெபனுனுக்கு அறிவித்திருக்கிறது.

## இராக் யூதர்கள் இஸ்ரேல் செல்வர்

லண்டன், மே 23—

இராக்கிலுள்ள 45,000 யூதர்கள் அடுத்த சில மாதங்களில் இஸ்ரேலுக்குப் புறப்பட்டுச்செல்வர் என்று பாக்தாத் செய்தி ஒன்று கூறுகிறது.

# கமால்பாஷா கட்சி ஆட்சிக்கு முடிவு

## துருக்கிக்குப் புதிய தலைவர் தேர்வு

63 வயதுள்ள ஜனநாயகக் கட்சித் தலைவர். ஸெலால் பயார் என்பவர் துருக்கியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

27 ஆண்டுகள் போட்டியின்றிப் பதவிவகித்த கமால் பாஷாவின் குடியரசுக் கட்சி சமீபத்தில் நடந்த ஜனநாயகக் கட்சியால் தோற்கடிக்கப்பட்டது.

முன்னுள் துருக்கி நாட்டுத் தலைவரும் குடியரசு எதிர்க் கட்சியின் தலைவருமாகிய தோழர் இஸ்மத் இனேனு. புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த முதல் கூட்டத்துக்கு வரவில்லை.

51 வயதுள்ள தோழர் அட்னன் மென்டிரஸ் பிரதமராகவும். தோழர் புவாத கோப்ருலுவை அயலநாட்டு மந்திரியாகவும் கொண்ட மந்திரி சபை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் பிரிட்டன், அமெரிக்கா சோவிய யூனியன் ஆகிய நாட்டு ஸ்தானிகர் உட்பட பலர் தலைவர் தேர்தல் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள்.

## லண்டனில் காஷ்மீர் மத்யஸ்தர் டிக்ஸன்

### வியாழனன்று டில்லிக்கு புறப்படுகிறார்

லண்டன், மே. 22—

காஷ்மீர் தகராறில் மத்யஸ்தம் செய்துவைக்க நியமிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலிய நீதிபதி ஓவன் டிக்ஸன் லண்டன் வந்து சேர்ந்திருக்கிறார்.

இவர் வியாழனன்று புது டில்லி, கராச்சிக்கு செல்ல லண்டனை விட்டு புறப்படுகிறார்.

இவர் பிரயாணதிட்டம் முதலியவைகளை ஐ. நா. வே ஏற்பாடு செய்து வருகிறது

அவர் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து எதுவும் இப்போது சொல்ல மாட்டார். என்று ஐ. நா வின் லண்டன் காரியாலயம் அறிவிக்கிறது.

—ஜுளோப்

# தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

| | ரூ. அ. பை |
|---|---|
| முன்வரவு | 2591—1—6 |
| வி. பஞ்சவர்ணம், மதுரை | 1—0—0 |
| ச. காமாட்சி, ,, | 1—0—0 |
| ச. செல்லையா, ,, | 0—8—0 |
| தி. மு. க.-மேட்டுப்பாளையம் (திருச்சி) கிளை | 15—0—0 |
| மு. காளியப்பன், இராமநாயக்கன்பட்டி | 1—0—0 |
| மீ. மு. அருணாசலம், | 1—0—0 |
| அ. கந்தசாமி, ,, | 1—0—0 |
| கே. ஹெ. சனுவு லாசாயபு, களம்பூர் | 1—0—0 |
| போ. பெ. அ. கலகுட்டி, பால்மேடு | 1—0—0 |
| ந. ஜானகிராமன், சென்னை | 4—0—0 |
| தி. ச. மணவாளமணி, ,, | 1—0—0 |
| அப்துல் இரகீம், காடுவெட்டி | 0—8—0 |
| வ. திருமாறன், மதுரை | 1—0—0 |
| எஸ். அப்துல்லலாம், ,, | 2—0—0 |
| கு. பெருமாள், பொத்தனூர் | 2—0—0 |
| ம. செகநாதன், ,, | 1—0—0 |
| ஓ. மு. கந்தசாமி, ,, | 1—0—0 |
| ஆ. வையாபுரி, ,, | 1—0—0 |
| கு. ஆறுமுகம், ,, | 1—0—0 |
| கா. சே. துரைசாமி, ,, | 1—0—0 |
| ம. வி. இராகவேந்திரன், ,, | 1—0—[illegible] |
| இரா. சண்முகம், ,, | 1—0—0 |
| முத்தசுப்பிரமணியம், ,, | 0—8—0 |
| ஆ. தங்கவேலு, ,, | 0—8—0 |
| பி. மாரியப்பன், தவுட்டுப்பாளையம் | 1—0—0 |
| பி. பழனிபாண்டி, ,, | 1—0—0 |
| சி. மு. காதர்பாட்சா, ,, | 1—0—0 |
| ஒரு அனுதாபி, ,, | 1—0—0 |
| டி. எம். பீசர், ,, | 1—0—0 |
| டி. எம். சின்னப்பா, ,, | 0—8—0 |
| கே. நடேசன், வேலாயுதம்பாளையம் | 1—0—0 |
| பி. நல்லசாமி, ,, | 1—0—0 |
| எஸ். செல்லமுத்து, தோட்டக்குறிச்சி | 1—0—0 |
| ஏ. எம். இஸ்மாயில், ,, | 1—0—0 |
| எம். அன்வார்பேசு, ,, | 0—8—0 |
| யு. ராஜகோபால், புகளூர் சர்க்கரை ஆலை | 1—0—0 |
| வே. அரங்கசாமி, ,, | 2—0—0 |
| ஏ. கே. சபூர், ,, | 1—0—0 |
| துலகர்தாபஸ் பொன்னையா, ,, | 1—0—0 |
| டி. குட்டிக்கிருஷ்ணன், ,, | 2—0—0 |
| ஒரு அனுதாபி, ,, | 1—0—0 |
| எம். கனகராஜ், ,, | 0—8—[illegible] |
| டி. பி. மூர்த்தி, ,, | 2—0—0 |
| ஏ. முத்தசாமி, ,, | 2—0—0 |
| டி. பி. வடிவேலு, ,, | 1—0—0 |
| எம். காமாட்சி, ,, | 1—0—0 |
| ஆர். ராசமாணிக்கம், ,, | 1—0—0 |
| ஆர். கண்ணுசாமி, ,, | 1—0—0 |
| ஜி. சின்னுசாமி, ,, | 1—0—0 |
| கே. முத்துகிருஷ்ணன், ,, | 1—0—0 |
| கே. வேலுசாமி, ,, | 1—0—0 |
| எஸ். சிங்காரம், ,, | 1—0—0 |
| ஏ. பெரியசாமி, ,, | 1—0—0 |
| எம். ஜெயகோபால், ,, | 1—0—0 |
| எஸ். பி. கணபதி, ,, | 1—0—0 |
| எம். பழனியாண்டி, ,, | 1—0—0 |
| பி. நல்லமுத்து, ,, | 1—0—0 |
| என். சாகுல் ஹமீது, ,, | 1—0—0 |
| எஸ். கே. அப்துல்காதர், ,, | 1—0—0 |
| ஆர். சின்னப்பன், ,, | 0—8—0 |
| பி. கோவிந்தசாமி, ,, | 0—8—0 |
| டி. பாலகிருட்டிணன், ,, | 0—8—0 |
| கந்தசாமி, ,, | 0—8—0 |
| எம். சின்னாண்டி, ,, | 0—8—0 |
| சி. குமாரசாமி, ,, | 0—8—0 |
| கே. கமால், ,, | 0—8—0 |
| பி. பால்ராஜ், ,, | 0—8—0 |
| வகாப், ,, | 0—8—0 |
| டி. பி. நடேசன், ,, | 0—8—0 |
| ஆர். மாணிக்கம், ,, | 0—8—0 |
| வி. வாசுதேவன், ,, | 0—8—0 |
| சி. ஆறுமுகம், ,, | 0—8—0 |
| சி. பெரியசாமி, ,, | 0—8—0 |
| எம். அப்துல்சமது, ,, | 0—8—0 |
| ஏ. கருப்பண்ணன், ,, | 0—8—0 |
| என். ராமசாமி, ,, | 0—8—0 |
| ஏ. மருதவீரன், ,, | 0—8—0 |
| சி. சுப்ரமணியம், ,, | 0—8—0 |
| எம். ஆர். தாஸ், ஷே. அமீர், ,, | 0—8—0 |
| அ. சோமசுந்தரம், ,, | 1—0—0 |
| எஸ். டேனியல், ,, | 1—0—0 |
| சி. என். தனுஷ்கோடி, ,, | 1—0—0 |
| | 2682—9—6 |

## முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டு அறிக்கை

கோவையிலே முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டு வேலைகள் சிறந்தமுறையிலே விரைந்து நடந்து கொண்டிருக்கின்றன. மாநாட்டு திடலிலே நூற்றுக் கணக்கான தொண்டர்கள் அணிவகுத்துநின்று பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். மாநாட்டு வெற்றியே தங்கள் குறிக்கோள் என தொண்டர்கள் முயற்சியில் முனைந்திருக்கின்றனர். மாநாட்டுப் பந்தல் கண்ணைக் கவரும்கவர்ச்சிநிறைந்த ஒரு பூஞ்சோலையாக புதுஒளி வீசி நிற்கிறது. கருத்தைக் கவரும் கவின்பெறு சிங்காரிப்புகள் தோய்ந்திருக்கிறது மாநாட்டிலே. மேடை, முகப்புப் பந்தல் இவைகளை எழிலோடு எடுத்துக்காட்ட சென்ட்ரல் ஸ்டுடியோவின் சித்திரக்காரர்கள் வருகிறார்கள். ஒலிபெருக்கி வசதியாக அமைக்க முயற்சிகள் எடுக்கப் பட்டுவருகின்றன. அறிஞர்கள் அவ்வப்போது உதிர்க்கும் பொன்மொழிகள் பந்தலிலே பூத்துப் புன்னகை புரிந்து கொண்டிருக்கும். சுருங்கக் கூறுவதானால் பொற்காலத் தமிழகத்தின் புரட்சித் தோற்றம் பந்தலில் படிந்திருக்கும். மாநாட்டிலே தொழிற் கண்காட்சி ஒன்று நன்றாக அமைக்க பி. எஸ். ஜி. காரர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாநாட்டிலே கடைகள் வைத்துக்கொள்ள நிறைய வசதி செய்துகொடுக்க அதே கம்பேர் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இனிமேல் விண்ணப்பம் செய்கிறவர்களுக்கு இடம் புதிதாகத் தான் அமைக்கவேண்டியிருக்கும். மாநாட்டுக்கு வரும் மக்கள் அனைவருக்கும் குளிர்ந்த தண்ணீர் கொடுக்க அசோகா சம்பெனியார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மாநாடு ஒரு சிறுஊராகவும், அங்கு ஊருக்கு வேண்டிய வசதிகள் உள்ளடங்கியுள்ள தாகவுமிருக்கிறது.

மாநாட்டு நன்கொடைச் சீட்டுகள் அதிகம் செலவாய் கொண்டிருக்கின்றன. கோவை மாவட்டத்திலுள்ள அவ்வளவுபேரும் மாநாட்டுச்செய்தியிலே மூழ்கியிருக்கிறார்கள். ஆகவே மற்ற மாவட்டக்காரர்கள் அனைவரும் விரைவாக வேண்டிய சீட்டுகள் பெற்றுக்கொண்டு மாநாட்டிலே பங்கெடுத்துக்கொள்ள வாருங்கள் என அழைக்கிறோம்!

தமிழகத்து தனிப்பெருந் தலைவர்கள் அனைவரும் கட்சி வேற்றுமையின்றி சேர்ந்து நின்று முத்தமிழ் வளர்க்க கோவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார்கள்.

வரலாறு கண்டிராத இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளைப்படம் பிடிக்க தகுந்த ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்துத் தலைவர்கள், கள், தொண்டர்கள், மக்கள் அனைவருமே திரண்டுவந்து கோவையில் கன்னித் தமிழ் வளர்க்கக் கூடி நிற்கிறார்கள்.

தமிழ் மகனே! அழைக்கிறோம்; புறப்படு கோவைக்கு. உன் தமிழ் தன்வாழ்வுக்கு உன்வரவை எதிர்பார்க்கிறது.

சி. வி. கோபால்,
விளம்பரச் செயலாளர்.

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

**25—5—50**

பாற்குளம்:—எம். எஸ். இராமசாமி.

**26-5-50**

கோற்கை:—எம். எஸ். இராமசாமி.

**27-5-50**

[illegible]மூர்:—சி. பி. சிற்றரசு.

**28-5-50**

கிருஷ்ணகிரி:—சி. பி. சிற்றரசு.

## முத்தமிழ் வளர்ச்சி மாநாடு கவிதை அரங்கம்

"அழகின் சிரிப்பு"—கவிதைப் போட்டியில் பங்கெடுத்துக்கொண்டு வெற்றிபெறுபவருள், முதலாவதாக வெற்றி பெறுபவருக்கு முதற் பரிசும் இரண்டாவதாக வெற்றி பெறுபவருக்கு இரண்டாவது பரிசும் வழங்கப்பெறும்.

கவிதைகளை புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், நாவலர் பாரதியார், அறிஞர் கா. அப்பாத்துரை ஆகிய மூவரும் நடுவராக இருந்து ஆய்ந்து பார்த்து, மதிப்பெண்களை குறித்துச் சிறந்தவரை தேர்ந்தெடுப்பர்.

போட்டியின் முடிவு மாநாட்டு நிகழ்ச்சியினூடே அறிவிக்கப்படும்.

பரிசுபெற்ற கவிதைகளைக் கவியரங்கத்தில் அரங்கேற்ற வாய்ப்பு அளிப்பதோடு, சிறந்தனவாகக் காணப்படும் பிற கவிதைகளையும் அரங்கேற்ற வசதி செய்து தரப்படும்.

அரங்கேற்றற்குரிய கவிதைகள் யாவை என்பதுபற்றி மாநாட்டில் முன்னறிவிப்பு செய்யப்படும்.

வரவேற்புக் கழுவினர்.

## கோ. மா. தி. மு. க. தோழர்களுக்கு அறிவிப்பு

கோவையில் நடைபெறும் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுக்குவரும் கோ. மா. தி. மு. க. தோழர்கள் இதுவரை சேர்த்துள்ள உறுப்பினர் சீட்டுகளின் அடிக்கட்டைகளை தவறாமல் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சே. அ. ராசமாணிக்கம்
துணைச்செயலாளன்

## பெல்லாரியில் வக்கீல் கைது

### கம்யூனிஸ்டுப் புஸ்தகங்கள் வைத்திருந்தாராம்!

பெல்லாரி, மே 22—

தோழர் எம். சத்யநாராயணராவ் என்ற வக்கீலும் அவருடைய குமாரனும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இங்கு கைதுசெய்யப்பட்டார்கள். தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்டு புத்தகங்களை இவர்கள் வைத்துக் கொண்டிருந்தார்களாம்! சப்மாஜிஸ்திரேட் இவர்களை பின்பு ஜாமீனில் விடுதலை செய்தார்.

## இராக்கில் பண்டை அரண்மனையின் சின்னங்கள்

பாக்தாத், மே 27—

இராக்கில் முன்பு ஒரு காலத்தில் ஆண்ட அஷோர் நேஸரிபல் என்பவரின் அரண்மனை அடிவாரத்தை பூமியைத் தோண்டியதில் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இந்த அரண்மனைச் சுவர்களில் அநேக அருமையான சித்திரங்கள் காணப்படுகின்றனவாம். மிகவும் நுட்பமான எழுத்துகள், இறக்கைகள் கொண்ட சிங்கம் இவை இச்சுவர்களில் தீட்டப்பட்டிருக்கின்றனவென்று கூறப்படுகிறது.

நகரத்தில் மிகவும் வேலைப்பாடுகள் கொண்ட பொருள்களும் அகப்பட்டிருக்கின்றன. நிலைமை காணப்பட்ட நீபா என்ற இடத்தில் சுமார் 700 களிமண் கட்டிகளும் அகப்பட்டிருக்கின்றன. இவைகளில் காணப்படும் எழுத்துகளிலிருந்து அஸீரிய நாகரிகம் பற்றிய வரலாற்றை தெரிந்துகொள்ளலாம்.

## விசித்திர பந்தய நாய்

லண்டன், மே 23—

ஒரு ஐரிஷ் பந்தய நாய் அதன் சொந்தக்காரர்களுக்கு பெரும் பிரச்னையை உண்டாக்கியிருக்கிறது. இதை பந்தயத்திற்கு தயாராக வைத்தால் எதிர்புறமாக ஓடுகிறதாம். கடைசியாக எதிர்புறமாக இதை நிற்கவைத்து ஓட்டிவிட்டார்கள். இதுமாதிரி நிற்கவைத்து ஓடவிட்டதே இந்த நாய் பலபரிசுகளைப் பெற்றிருக்கிறதாம்.

—ரூட்டர்

## ஜெருசலத்திற்கு கிருஸ்துவ யாத்ரீகர்கள்

அம்மான், மே 23—

இவ்வாண்டு ஆயிரக்கணக்கான கிறிஸ்துவ யாத்ரீகர்கள் ஜெருசலத்திலுள்ள புண்ணியஸ்தலங்களுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள் என்று ரோம், ஸ்விட்ஸர்லாந்து, பெல்ஜியம் முதலிய இடங்களுக்கு சென்று திரும்பியுள்ள அரபு டூரிஸ்ட் ஏஜென்ஸியைச் சேர்ந்த டாக்டர் ஹூலேனி கூறினார்.

(ரூட்டர்)

## ஷூமன் திட்டம்

லண்டன், மே 23—

பிரெஞ்சு, ஜெர்மன் உருக்கு நிலக்கரி தொழில் சம்பந்தமாக பிரெஞ்சு மந்திரி ஷூமென் வெளியிட்ட திட்டத்தைப்பற்றி ஆலோசிக்க ஐரோப்பிய சோஷலிஸ்டுகளின் மாநாட்டை பிரிட்டிஷ் தொழிற் கட்சி கூட்டுகிறது.

## இஸ்ரேல் கிறிஸ்துவர்களுக்கு உணவு வழங்கல்

ஜெருசலம், மே 23—

இஸ்ரேலில் உள்ள கிறிஸ்துவர்களுக்கு செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் உணவு சப்ளை அனுப்புவதை அனுமதிக்க வேண்டும் என்று ஜோர்டானிலுள்ள கிறிஸ்துவர்களின் கோரிக்கையை அரபு அதிகாரிகள் நிராகரித்துவிட்டனர்.

## யார்மீதும் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கூட சமீபகாலத்தில் அவ்வாறு ஒத்துழைப்புக்குத் தலையான வசதிகள் குறைந்து விட்டன. குடியரசு இந்தியாவின் மக்களும், குடியரசு சீனாவின் மக்களும் உலகிலேயே மிகவும் பழைய காலத்து மரபினைச் சேர்ந்தவர்களாவார்கள். இன்று இவ்விரண்டு இனங்களும் மக்களின் முன்னேற்றத்துக்காக உழைக்கக்கூடிய நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆசியாவில் உள்ள இவ்விரண்டு குடியாட்சி நாடுகளின் மக்கள் தொகை உலக மக்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்குமேல் இருப்பதால் உலக அமைதிக்கு ஒரு ஆணி வேர்போல் விளங்கலாம்.

இரு நாடுகளும் ஒன்றை யொன்று மதிக்கும் வகையில் சீன அரசாங்கத்துடன் நல்லுறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எங்களுடைய சர்க்காரின் எண்ணம். பல வழிகளில் ஒன்றுபட்ட பண்பாடுள்ள நமதிரு நாடுகளும் ஒத்துழைத்து ஆசியாவை அமைதியின் கேந்திரமாக்க வேண்டுமென்பதே என் நம்பிக்கை.

"நமதிரு நாடுகளின் ஒத்துழைப்புக்காக உழைக்க வேண்டுமென்பதே என விருப்பம். தாங்களும் சீனக் குடியரசு அரசாங்கமும் எனக்கு ஏற்ற உதவிகள் செய்து கொடுக்குமென்று நான் உணர்ந்திருக்கிறேன்."

சடங்கு முடிவடைந்தபின் சுமார் 30 நிமிடம் மா-சே-துங் சர்தார் பணிக்கருடன் பேசிக் கொண்டிருந்தார். பேச்சின் போது பிரதமந்திரி சௌ-இன்லை கூட இருந்தார்.

### சௌ-இன்-லையுடன் பேச்சு

ஸ்தானிகராக பதவி ஏற்பதற்கு இரண்டு நாளுக்கு முன்பு சர்தார் பணிக்கர் சீனப்பிரதமமந்திரி சௌ-இன்லையைச் சந்தித்து ஒன்றரை மணிநேரம் பேசிக் கொண்டிருந்தார். இந்தியாவுடன் தொடர்ந்து நல்லுறவுடன் சீனா இருக்க விரும்புகிறதென்று அவர் கூறினார்.

இந்தியாவின் ஜமீன்தாரி முறை ஒழிப்பு, அகதிகள் நிர்மாணதிட்டங்கள், ஆற்றுப்படுகை திட்டங்கள் ஆகியவைபற்றி தோழர் சௌ-இன்-லை மிக ஆவலுடன் பேசியதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியா சீனா ஆகிய இரு நாடுகளின் பிரச்சினைகள் ஒரே மாதிரியானவையென்றும், இயந்திரத்தொழில் துறையில் இருநாடுகளும் வேகமாக முன்னேறினாலொழிய உண்மை சுயேச்சை நாடுகளாக அவைகள் இருக்க முடியாதென்று தோழர் சௌ-இன்-லை அறிவித்தார்.

## பிரஞ்சு இந்தியாவுக்கு இந்தோ-சீனா அரிசி

புதுச்சேரி, மே 22 –

பிரெஞ்சு இந்தியா, இந்தோசீனாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்திருக்கிறது.

சைகோனிலிருந்து வந்த சன்டாய் என்னும் கப்பல் 150 டன் அரிசியை இறக்குமதி செய்திருக்கிறது. 70,000 தோசை பொருளை வேதை இக்கப்பல் கொண்டுவந்திருக்கிறது.

## இனி நடப்பவை

28 5 50 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தாழ்த்தப்பட்டோர் சம்மேளன ஊழியர்கள் கூட்டம். ஆர்க்கோணம் டவுனிலுள்ள பெடரேஷன் கட்டடத்தில் நடைபெறும்.

* * *

திருப்பூர்:— திருப்பூரில் 26-5-50 அன்று ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அன்று சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

ஐக்கிய வாலிப சங்கம்:-மாநாட்டுக் கூட்டம் 26—5—50 வெள்ளி அன்று மாலை 5-மணிக்கு கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் (நகர உயர்நிலைப்பள்ளியில்) நடைபெறும். அதுபோது ரிஜிஸ்டர் ஆக வேண்டிய வைத்தியர்களுக்கான கமிட்டி அமைத்தல், மருத்துவ சம்பந்தமான சொற்பொழிவுகள் நடைபெறும்.

## காஞ்சீபுரம் அருகில் பெரிய தீ விபத்து!

20-5-50 மாலை 3-30 மணிக்கு காஞ்சீபுரம் எல்லை அருகில் ஒரு பர்லாங் தொலைவில் உள்ள, 71 செருப்படி தெற்றடி கிராமத்தில், திடீரென எதிர்பாராதவிதமாக தீப்பிடித்துக்கொண்டது. நீசேதம் விரைவாக பெருந்தொகையாக ஏற்பட்டிருக்கிறது. தீவிபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தி. மு. க. தோழர்கள் முயற்சியால் ஆதரவு அளிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

## மிதவாத முன்னேற்ற கட்சித் தலைவர் கொலை

அஸ்மாரா, மே 23—

எரிட்ரியாவில் மிதவாத முன்னேற்றக் கட்சியின் உபதலைவரான வொஹேஹெரேபெடான் அஸ்மாட்ச் என்பவரை ஒரு கிரிமினல் கூட்டத்தினர் மே 16-ந் தேதி கொலை செய்துவிட்டனர்.

சுமார் 30 விருக்கக்கொண்ட ஒரு கூட்டத்தினர் அஸ்மாராவுக்கு 30 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் புகுந்து கைகண்டவரை வீழ்த்தினர் என்றும் தெரிய வருகிறது.

அறிஞர்

அண்ணாவின்

புகைப்படம் (போட்டோ)

$8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ அளவு

100 காப்பிகள் ரூ. 15.

தேவையான காப்பிகளுக்கு 50% முன்பணத்துடன் விண்ணப்பிக்கவும்"

விவரங்களுக்கு:-பதி பிரதர்ஸ், காஞ்சீபுரம்.

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலைமணி" யை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
"மாலைமணி"

தேவை

நல்ல அனுபவமுள்ள "டிரெடில்மென்" ஒருவர் தேவை. அனுபவத்திற்கேற்ற ஊதியம் அளிக்கப்படும்.

மானேஜர்: 'மாலைமணி'

# முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

காலம்:-மே 27, 28 சனி, ஞாயிறு

இடம்: கோவை நகர் ஆர். எஸ். புரம் உயர்நிலைப்பள்ளித் திடலில் அமைந்துள்ள 'வள்ளுவர் பந்தல்'

★

தலைவர்:-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

திறப்பாளர்:-நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்.

★

## இயல் அரங்கு-சொற்பொழிவாளர்கள்:–

தோழர்கள்:–

| | |
|---|---|
| இராம மீனாட்சிசுந்தரம் எம். ஏ, | என். வி. நடராசன் |
| சி. பி. சிற்றரசு | கே. ஏ. மதியழகன் பி. ஏ |
| புலவர் கன்னன் | ப. கண்ணன் |
| கே. ஏ. பி. விசுவநாதன் | மு. அண்ணல் தங்கோ |
| ஏ. வி. பி. ஆசைத்தம்பி | டி. கே. சீனிவாசன் |
| கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி. | அ. பொன்னம்பலனார் |
| மு கருணாநிதி | க. அன்பழகன் எம். ஏ, |
| புலவர் ஔவை சு. துரைசாமி | ஏ. சித்தையன் |
| ஏ. கே. வேலன் | இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, |
| புலவர் வெள்ளைவாரணனார் | சி என். அண்ணாதுரை எம். ஏ. |

★

## இசையரங்கு-இசைவாணர்கள்:-

என். எஸ். கிருஷ்ணன்
வில்லுப்பாட்டு "வள்ளுவர் வரலாறு"
சி. எஸ். ஜெயராமன்
டி. வி. நமசிவாயம்
இராசமாணிக்க பாகவதர்

★

## கூத்து அரங்கம்:-

"சந்திரமோகன்" —
(27–5-50 இரவு)
— "நீதிதேவன்மயக்கம்"
(28–5-50 இரவு)

நடிகர்கள்:-கே. ஆர் ராமசாமி, சி. என். ஏ., டி. வி. நாராயணசாமி, எஸ் எஸ். ராஜேந்திரன், க. அன்பழகன், ஈ. வி. கே. சம்பத், ஈழத்தடிகள் மற்றும் பலர்.

வரவேற்புறுப்பினர் நன்கொடைக் கட்டணம் ரூ 5–0–0
பிரதிநிதி .... .... ரூ. 2–0–0

★

எஸ். ஆர். சுப்பரமணியம்,
ஜி. என். ராசு,
எஸ். ஏ. ராசமாணிக்கம்,
செயலாளர்கள்.

பி. பழனிசாமி,
பொருளாளர்.

ஈ. வெ. கி. சம்பத்
வரவேற்புக் குழு தலைவர்,
சி. வி. கோபால்,
விளம்பரச் செயலாளர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.